### மனிதக் கழிவை மனிதன் அகற்ற எதிர்ப்பு

# ரயில் மறியல் முயற்சி: 54 பெண்கள் உள்பட 293 பேர் கைது

கோவை, நவ. 29: மாவட்டம் முழுவதும் ரயில் மறியல் செய்ய முயன்ற ஆதித் தமிழர் பேரவை மற்றும் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த 54 பெண்கள் உள்பட 293 பேர் திங்கள்கிழமை கைது செய்யப்பட்டனர் (படம்).

மனிதக் கழிவை மனிதன் அகற்றும் நிலை ரயில் நிலையங்களில் நடைமுறையில் உள்ளதைக் கண்டித்து, மாவட்டம் முழுவதும் ரயில் மறியல் செய்யப்போவதாக ஆதித் தமிழர் பேரவை அறிவித்தது.

இப் போராட்டத்துக்கு தந்தை பெரியார் திராவிடர் கழகம் ஆதரவு அளிப்பதாக அறிவித்தது. அதன்படி, ஆதித் தமிழர் பேரவை மாநகரத் தலைவர் முனுசாமி தலைமையில், கோவை ரயில் நிலையம் முன் திரண்ட தந்தை பெரியார் திராவிடர் கழகம், ஆதித் தமிழர் பேரவையைச் சேர்ந்த 24 பெண்கள் உள்பட 122 பேர் கைது செய்யப்பட்டனர்.



முன்னதாக, தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலர் கு.ராமகிருட்டிணன் மறியல் போராட்டத்தைத் துவக்கி வைத்தார். இதையொட்டி கோவை ரயில் நிலையம் முன் 50-க்கும் மேற்பட்ட போலீஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேபோல், திருப்பூர் ரயில் நிலையம் முன் ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயற்குழு உறுப்பினர் மாறன் தலைமையில் மறியல் செய்ய முயன்ற 16 பெண்கள் உள்பட 116 பேர் கைது செய்யப்பட்டனர்.

உடுமலை ரயில் நிலையத்தில் வட்ட அமைப்பாளர் வள்ளுவன் தலைமையில், மறியல் செய்ய முயன்றதாக 37 பேர் கைது செய்யப்பட்டனர்.

பொள்ளாச்சி ரயில் நிலையம் முன்பு 14 பெண்கள் உள்பட 108 பேர். சோமனூரில் வட்டத் தலைவர் முத்துவீரன் முன்னிலையில் ரயில் மறியல் செய்ய முயன்ற 18 பேர் கைது செய்யப்பட்டனர்.

### உடுமலையில் 37 பேர் கைது

உடுமலையில் ரயில் மறியல் செய்ய முயன்ற ஆதித் தமிழர் பேரவையைச் சேர்ந்த 37 பேர் திங்கள்கிழமை கைது செய்யப்பட்டனர்.

உடுமலை பஸ் நிலையத்தில் இருந்து ரயில் நிலையத்துக்கு ஆதித் தமிழர் பேரவையின் வட்டார அமைப்பாளர் பெருமாவளவன் தலைமையில் ஊர்வலமாகச் சென்றனர். ரயில் நிலையம் முன்பாக அவர்களை உடுமலை போலீஸார் கைது செய்தனர்.

### மனிதன் கழிவை மனிதர் அகற்றும் கொடுமைக்கு எதிராக

# ஆதித் தமிழர் பேரவை - தொடர்வண்டி மறியல்

மனிதன் கழிவை மனிதர் அகற்றும் கொடுமைக்கு எதிராகத் தமிழகம் தழுவிய அளவில் 22 இடங்களில் ஆதித் தமிழர் பேரவை இரயில் மறியலை நடத்தத் திட்டமிட்டு, நவம்பர் 28-ஆம் நாளன்று நடத்தியது. இதில் தந்தை பெரியார் திராவிடர் கழகமும் கலந்து கொண்டது. இரயில் மறியலுக்குச் சென்ற ஆயிரக்கணக்கானோரை மறியலுக்கு முன்பாகவே தடுத்து நிறுத்திக் கைது செய்தது காவல் துறை.

மனிதக் கழிவை அகற்றுவதற்கு நவீன இயந்திரங்களைப் பயன் படுத்த வேண்டும். 1993-இல் மத்திய அரசு மனித மலத்தைக் கையால் அள்ளுவதைத் தடை செய்தது. ஆனால் இந்த இழிநிலை இன்னும் மாற்றப்படவில்லை. "ஒருதுளி மலம் உங்கள் உடம்பில் மட்டும்தான் இருக்கிறதா? உள்ளத்திலும் இருக்கிறதா?" - எனும் கேள்வியை எழுப்பி மக்களிடையே பல்லாயிரம் துண்டறிக்கைகள் மூலம் பரப்பல் செய்துள்ளது ஆதித் தமிழர் பேரவை.